அன்றாட வாழ்வை வளப்படுத்த அன்புறவுக்கும் பரிவிரக்கத்திற்கும் நமது ஈடுபாட்டை உறுதிப்படுத்த அழைப்பதே, மூவொரு கடவுள் திருவிழா.

– திருத்தந்தை பிரான்சிஸ்

புதிய ஏற்பாட்டில், ஆண்டவரின் திருமுழுக்கில்தான் முதன் முறையாக மூவொரு கடவுள் அறிமுகமாகிறார். தூய ஆவியானவர் இயேசுவின் மீது வந்திறங்கிய போது, இவரே என் அன்பார்ந்த மகன் என தந்தையாகிய கடவுள் பிரகடனம் செய்வார். இதன் பின்னர், என்னைப் பார்ப்பவர் என் தந்தையைப் பார்க்கின்றனர் என தமது சீடர்களுக்கு இயேசு கூறுவார். தந்தை, மகன், தூய ஆவியானவரின் பெயரால் திருமுழுக்குக் கொடுத்து, நற்செய்தியை அறிவிக்கும்படி அவர்களுக்குப் பணிப்பார். மூவொரு கடவுளின் முக்கியத்துவத்தை தனது நாள்காட்டியில் திரு அவை வெளிப்படுத்துகிறது.

மூவொரு கடவுளின் பெயராலே, திருமுழுக்கின் வழி நம்பிக்கையாளர்கள் கிறிஸ்துவச் சமூகத்தில் இணைகின்றனர். மூவொரு கடவுளின் வாழ்வின் அருளைப் பகிர்ந்து கொள்ள அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அவ்வாறே, திருமண அருளடையாளத்திலும் தந்தை, மகன், தூய ஆவியானவரின் பெயரால் தம்பதியினர் அருள்பொழிவு செய்யப்பட்டு, வாழ்நாள் பங்காளித்துவம் அவர்களுக்கிடையில் ஏற்படுத்தப்படுகிறது. இது மூவொரு கடவுளைப் பிரதிபலிக்கிறது.

நமது திருவழிபாட்டில் இக்கருத்து மேலும் செறிவு ஊட்டப்படுகிறது. பாஸ்கா மறைபொருள், கிறிஸ்துவின் உயிர்ப்பலி நற்கருணையில் நிலைபெற்று, தூய ஆவியானவர் வழியாக தந்தையிடம் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. நம்பிக்கை செபத்தைச் சொல்லும் போதும் மூவொரு கடவுளை மாட்சிப்படுத்துகிறோம். எந்தவொரு செபத்தையும் தந்தை, மகன், தூய ஆவியானவரின் பெயராலே தொடங்குகிறோம்.

மூவொரு கடவுளின் மறைபொருள் அன்பின்மயமானது. அவர்களில் பங்கு கொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். மூவொரு கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம், வாழ்வில் இதனை வாழ்ந்து காட்ட வேண்டும். மூவொரு கடவுள் இருப்பது போல் நாமும் மற்றவர்களுக்கு ஒன்றிணைந்து வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவர்கள் என்ற முறையில் நாம் தனித்து வாழ முடியாது. "நான்-கடவுள்-பிறர்" என்ற மூவொரு கடவுளின் கோட்பாட்டில் வாழ பணிக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவப் பழக்கத்தையும் சமூகநீதியையும் தார்மீகப் பண்பையும் அடிப்படையாக கொண்டு ஒருவருக்கொருவர் பணியாற்ற இது அழைக்கிறது. அன்பு உதயமானதே, இவ்வகையான ஒன்றிணைந்த வாழ்விலிருந்துதான். இவ்வன்பு இறைக்கரத்தால் தன்மையமாக நம்மிடம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மூவொரு கடவுளுக்கு மாட்சிமையைக் கொண்டு வருவோம். ✝

**இன்றைய வாசகங்கள்:**

விப. 34, 4-6. 8-9.

தானி. 3, 52-56.

2 கொரி. 13, 11-13.

யோவா.3, 16-18.

**வாரம் ஒரு வசனம்**

அன்புறவில் வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்

INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2020
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

7 ஜூன் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

**மூவொரு கடவுள் விழா**

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:
**ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்**



# ஒன்றிணைந்து வாழ்தல்

நமது மீட்பின் மறைபொருளைக் குறிக்கும் பல்வேறு விழாக்களின் கொண்டாட்டத்தை நமது திரு அவையின் நாள்காட்டி கொண்டுள்ளது. இன்று, மூன்று ஆள்கள் ஒரே கடவுளாக இருக்கும் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். மூன்று ஆள்களாக இருந்தாலும் எல்லாவற்றிலும் அவர்கள் இணைப்பிரியா ஒருவராக இருக்கிறார்கள்.




மினவுதல் மாதா தேவாலயம்
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

**மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்**

*2020 ஜுன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*

***ஒரு வார்த்தை சொல்லும் நான் குணம் பெறுவேன்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** மூவொரு கடவுள் பெருவிழா - 9 ஆம் ஞாயிறு 06 – 07 ஜுன் 2020
வி.ப 34 :4-6, 8-9 தானி (இ): 1: 29, 30-31, 32-33 2 கொரி 13: 11-13 யோவான் 3: 16-18
“என்றென்றும் நீர் புகழப் பெறவும் ஏத்திப் போற்றப் பெறவும் தகுதியுள்ளவர்” ! ” - தானி (இ) : 1

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 24 மே) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 24,536.00** | **RM 13,038.00** | **RM 3025.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

| | |
|---|---|
| 1.வங்கியின் பெயர்: | **Public Bank Berhad** |
| 2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: | **Church of Visitation** |
| 3.வங்கிக் கணக்கு எண்: | **3121194612** |

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

**கூடியவிரைவில் ஆலய வழிபாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்பதை அறியத்தருகின்றோம்**

**பங்கு அலுவலகம் தற்காலிகமாக அடுத்த அறிவிப்பு வரும்வரை காலை 8.30 முதல் பகல் 1.30 வரை திறந்திருக்கும்**

பங்கின் மறு சுழற்சி திட்டம் அடுத்த அறிவிப்பு வரும்வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே தயவு செய்து உங்கள் மறு சுழற்சி பொருட்களைக் கொண்டுவந்து குருவானவரின் கார் நிறுத்துமிடத்தில் வைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
1) டெடி ஸ்டா மரியா- இறப்பு: 30-05-2020
2) எமி மார்த்தா யோங் நியிக் லிங் - இறப்பு: 30-05-20

***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

- மாத்தான், கவாய் மற்றும் பெனன் திருநாளைக் கொண்டாடும் சபா சரவாக் சகோதர சகோதரிகளுக்கு அருட்பணியாளர்கள்: சேவி மற்றும் கென்னத் தங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

- **கடவுளோடு நெருங்கிய உறவு:**

அன்புள்ள சகோதர சகோதரிகளே!, திருவழிபாட்டு நாட்காட்டியில் பொதுக்காலம் 10 ஆம் வாரத்தில் நாம் மூவொரு இறைவன் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த வார்த்தையை நாம் செவிமடுக்கும் நேரத்தில், கடவுளின் மறை உண்மையை நாம் உணர்ந்துகொள்ள முடியும். எபேசியர்: 3:20 - நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும், நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே மாட்சி உரித்தாகுக” அவரை நாம் நெருக்கமாக அறிந்துகொண்டால் அவரிடமிருந்து நிறைவாக நாம் பெற்றுக்கொள்வோம். உங்களோடு நெருக்கமானவர்களோடு இருந்தால் இவ்வாறு செய்யமுடியும். எனவே, கடவுளை தொலைவில் வைத்துப் பார்க்காமல், மிக அருகிலேயே அவரை வைத்துப் பார்க்கவும் அவருக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாகவும் இருப்போம். உங்கள் அனைவருக்கும் மூவொரு இறைவன் திருவிழா வாழ்த்துகள்: அருட்பணி சேவி மற்றும் கென்னத்.

- கடந்த மூன்று மாதங்களாக நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் காரணமாக ஆலய வழிபாடுகள் நடைபெறாததால், ஆலயத்தின் நிதிவரவு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆலயம் மற்றும் பங்கின் செலவுகளுக்கு இதுவரை கிடைக்கப்பெற்றுக்கொண்டிருக்கும் தொகை பற்றாக்குறையாக உள்ளது. இதனால், உங்களுடைய நிதியை சிறியதோ பெரியதோ அதை நாங்கள் மிகவும் மதிப்பு மிக்கதாகக் கருதி ஏற்றுக்கொள்கிறோம். இதுவரை தாராள உள்ளத்தோடு தந்தவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!. இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**“உன் செல்வத்தைக்கொண்டு அவரைப் போற்று; உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்குக் காணிக்கையாக்கு அப்பொழுது உன் களஞ்சியங்கள் நிறைந்திருக்கும்; குடங்களில் திராட்சை இரசம் வழிந்தோடும்.”**

- ***இணையத்தின்வழி திருப்பலிகளில் பங்குகொள்ள:*** ***www.Tv.ArchKL.org***

06-06-2020 முதல் ஜூன் 12 வரை)

| | |
|---|---|
| சனிக்கிழமை: 06-06-2020: | மாலை 6.00 மணி (தேசிய மொழி) |
| ஞாயிற்றுக்கிழமை: 07- 06 -2020 | காலை 7.30 மணி ( தமிழ்) |
| | காலை 9.00 மணி ( மாண்டரின்) |
| | காலை 10.30 மணி(ஆங்கிலம்) |

வாரநாட்கள்: (திங்கள் - வெள்ளி) ஜூன் 8-12வரை மாலை 6.00 மணி (ஆங்கிலம்) (ஆங்கிலம்)